உ

கணபதி துணை.

திருப்புல்வயல்

குருபாததாசர் அருளிச்செய்த

குமரேச சதகம்.

இஃது,

மதுரை, புதுவை, தஞ்சை, சென்னை என்னுநகரங்களின்
தமிழ்ப்பள்ளிக்கூடத்துபாத்தியாயர்கள் சொல்நலிந்
தும், எழுத்து மிகுந்தும், பிறழ்ந்தும் இருப்ப
தைக் களைந்து சுத்தபாடமாக வழங்கு
விக்கக் கேட்டுக் கொண்டபடி
சென்னைத் துரைத்தனத்தாரால் ஏற்படுத்தப்பட்ட
" பிரசிடென்ஸ் காலீஜ்" என்னும்
சகலகலாசாலைத்
தமிழ்த் தலைமைப் புலமை நடாத்திய
திருத்தணிகை

விசாகப்பெருமாளைய ரவர்கள்,

மாணாக்கராகிய

புு. வீ. அப்பாசாமி முதலியாராலும்,

அவர்குமாரர்

புு. அ. அய்யாகண்ணு முதலியாராலும்,

சென்னை:
மீனாக்ஷியம்மை கலாநிதி
அச்சுக்கூடத்திற் அடுக்கி பரிசோதிக்கப்பட்டது.
இந்துதியலாஜிகல்பிரஸ்.

நான்காம் பதிப்பு.

ஹேவிளம்பி-ஷு.
இதன்விலை அணா - ௧௨.

உ

சிவமயம்.

குமரேச சதகம்.

காப்பு வெண்பா.

பூமேவு புல்லைப் பொருந்துகும ரேசர்தம்மேல்
தேமேவிய சதகஞ் செப்பவே—கோமேவிக்
காக்குஞ் சாவணத்தான் கம்பகும்பத் தைந்துகாக்
காக்குஞ் சரவணத்தான் காப்பு.

அவையடக்கம்.

மாரிக்கு நிகரொன்று பனிசொரிதல் போலவு மலை க்குநிக ரொன்றுசிறுபெண், மணல்வீடு கட்டுவது போல வுஞ் சூரியன்முன் மருவுமின் மினிபோலவும், பாருக்கு ணல்லோர்மு னேபித்தர் பலமொழி பகர்ந்திடுஞ் செயல் போலவும், பச்சைமயி லாடுதற் கிணையொன்று வான் கோழி பாரிலாடுதல் போலவும், பூரிக்கு மினியகாவேரி க்கு நிகரென்று போதுவாய்க்கால் போலவும், புகல் சிப்பி முத்துக்கு நிகராப் பளிங்கைப் பொருந்தவைத் ததுபோலவும், வாரிக்கு முன்வாவி பெருகல்போலவு மின்சொல் வாணர்மு னுகந்துபுல்லை, வாலகும ரேசர் மேற் சதகம் புகன்றனன் மனம்பொருத் தருள்புரிகவே.

குமரேசர் மகிமை.

பூமிக்கொ ராறுதலை யாய்வந்து சரவணப் பொய்கை தனில் விளையாடியும், புனிதர்க்கு மந்த்ரவுப தேசமொழி சொல்லியும் போதனைச் சிறையில் வைத்தும், தேமிக்க வரிகாப் பிரமாதி கட்குஞ் செயிக்கமுடியா வசுரனைத், தேகங்கிழித் துவடி வேலினு லிருகூறு செய்தமரர் சிறை தவிர்த்தும், நேமிக்கு ளன்பரிட ருற்றசமயந்தனி னினை

க்குமுன் வந்துதவியும், நிதமுமெய்த் துணையாய் விளங் கலா லுலகிலுனை நிகரான தெய்வமுண்டோ, மாமிக்க தேன்பருகு பூங்கடம் பணியுமணி மார்பனே வள்ளி கணவா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலை மேவு குமரேசனே. (க)

அந்தண ரியல்பு.

குறையாத காயத்ரி யாதிசெப மகிமையுங் கூறுசுரு திப் பெருமையுங், கோதிலா வாகம புராணத்தின் வள மையுங் குலவுயாகாதி பலவும், முறையா நடத்தலாற் சகல தீவினைகளையு முளரிபோலே தகிப்பார், முதன்மை பெறு சிலைசெம்பு பிருதுவி களிற்றெய்வ மூர்த்தமுண் டாக்குவிப்பார்; நிறையாக நீதிநெறி வழுவார்க ளாகையா னீண்மழை பொழிந்திடுவதும், நிலமது செழிப்பதும் மாசர்செங் கோல்புரியு நிலையுமாதவர் செய் தவ மும், மறையோர்க ளாலே விளங்குமிவ் வுலகத்தின் மானிடத் தெய்வமிவர்காண், மயிலேறி விளையாடு குக னேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (உ)

அரச ரியல்பு.

குடிபடையி லபிமான மந்திரா லோசனை குறிப்பறி தல் சத்யவசனங், கொடைநித்த மவரவர்க் கேற்றமரி யாதைபொறை கோடாதசது ருபாயம், படிவிசா ரணை யொடு ப்ரதானிதள கர்த்தரைப் பண்பறிந்தே யமைத் தல், பல்லுயிரெலாந்தன் னுயிர்க்குநிக ரென்றே பரித் தல்குற் றங்கள்களைதல், துடிபெறு தனக்குறுதி யான நட் பகமின்மை சுகணமொடு கல்வியறிவு, தோலாத காலமிட மறிதல்வினை வலிகண்டு துஷ்டநிக்ரக சௌரி யம், வடிவுபெறு செங்கோ னடத்திவரு மாசர்க்கு வழு வாத முறைமையிதுகாண், மயிலேறி விளையாடு குகனே புல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௩)

வணிக ரியல்பு.

கொண்டபடி போலும்விலை பேசிலா பஞ்சிறிது கூடிவர நயமுறைப்பார், கொள்ளுமொரு முதலுக்கு

மோசம் வராதபடி குறுகவே செலவுசெய்வார், வண்டப் புரட்டர்தா முறிதந்து பொன்னடகு வைக்கினுங் கடனீந்திடார், மருவுநா ணயமுளோர் கேட்டனுப் புகினு மவர் வார்த்தையி லெல்லாங் கொடுப்பார், கண்டெழுது பற்றுவர வினின்மயிர்ப் பிளந்தே கணக்கிலனு வாகிலும்விடார், காசுவீ ணிற்செலவி டாருசித மானதிற் கனதிரவியங்கள் விடுவார், மண்டலத் தாடுகன வர்த்தகஞ் செய்கின்ற வணிகர்க்கு முறைமை யிதுகாண், மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௪)

வேளாள ரியல்பு.

நல்லதே வாலயம் பூசனை நடப்பது நாடோறு மழை பொழிவதும், நாடிய தபோதனர்கண் மாதவம் புரிவது நவில்வேத வேதியரெலாம், சொல்லரிய யாகாதி கருமங்கள் செய்வதுந் தொல்புவி செழிக்கு நலமுஞ், சுபசோபனங்களுங் கொற்றவர்கள் செங்கோல் துலங்குமனு நெற்முறைமையும், வெல்லரிய சுகிர்தமொடு வர்த்தகன் கொள்விலையும் விற்பனையு மதிபுகழும், மிக்கவதி காரமுந் தொழிலாளர் சீவனமும் வீரரண சூரவலியும், வல்லமைகள் சகலமும் வேளாளர் மேழியின் வாழ்வினுன் விளைவவன்றோ, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (ரு)

பிதாக்கள்.

தவமது செய்தேபெற் றெடுத்தவன் முதற்பிதா தனைவளர்த்தவ னொருபிதா, தயையாக வித்தைதனைச் சாற்றினவ னொருபிதா சார்ந்தசற்குருவொருபிதா, அவமறுத் தாள்கின்ற வரசொரு பிதாநல்ல வாபத்து வேளைதன்னில், அஞ்சலென் றுற்றதுயர் தீர்த்துளோ னொருபிதா வன்புளமுளோ னொருபிதா, கவளமிடு மனைவியைப் பெற்றுளோ னொருபிதா கலிதவிர்த்தவ னொருபிதா, காசினியி லிவரைநித் தம்பிதா வென்றுளங் கருதுவது நீதியாகும், மவுலிதனின் மதியரவு புனைவிமல

ருதவுசிறு மதலையென வருகுருபரா, மயிலேறி விளை யாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (சு)

ஒன்றையொன்று பற்றியிருப்பன.

சத்தியந் தவறு திருப்பவ ரிடத்தினிற் சார்ந்து திரு மாதிருக்குஞ், சந்ததந் திருமா திருக்கும விடந்தனிற் றனதுபாக் கியமிருக்கும், மெய்த்துவரு பாக்கிய மிருக்கும விடந்தனில் விண்டுவின் களையிருக்கும், விண்டு வின் களைபூண் டிருக்கும விடந்தனின் மிக்கான தயை யிருக்கும், பத்தியுட னினியதயை யுள்ளவ ரிடந்தனிற் பகர்தரும மிகவிருக்கும், பகர்தரும முள்ளவ ரிடந்த னிற் சத்துரு பலாயனத் திறலிருக்கும், வைத்திசை மிகுந்ததிற லுள்ளவ ரிடத்தில்வெகு மன்னுயிர் சிற க்குமன்றே, மயிலேறி விளையாடு குகனே புல் வயனீடு மலைமேவு குமரேசனே. (எ)

இவர்க்கிவர் தெய்வமெனல்.

ஆதுலர்க் கன்னங் கொடுத்தவர்களே தெய்வமன் பான மாணுக்கருக், கரியகுருவே தெய்வ மஞ்சினோர்க் காபத் தகற்றினோனே தெய்வமாம், காதலுறு கற்பு டைய மங்கையர் தமக்கெலாங் கணவனே மிக்கதெய் வங், காசினியின் மன்னுயிர் தமக்கெலாங் குடிமாபு காக்கு மன்னவர் தெய்வமாம், ஓதறிய பிள்ளைகட்கன்னை தந் தையர்தெய்வ முயர்சாதி மாந்தயர்க்கும், உறவின் முறை யார்தெய்வம், விசுவாச முள்ளபேர்க் குற்றசிவ பத்தர்தெய்வம், மாதயையி னூற்குத் திரர்க்குமறை யோர்தெய்வம் வானவர்க்குத் தெய்வநீ, மயிலேறி விளை யாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (அ)

இவர்க்கிது னினைவெனல்.

ஞானநெறி யாளர்க்கு மோக்ஷத்திலே நினைவு நல் லறிவுளோர் தமக்கு, நாடோறுந் தருமத்திலே நினைவு மன்னர்க்கு ராச்சியந் தன்னினினைவு, ஆனகா முகரு க்கு மாதர்மேலே நினைவு ளஞ்சாத திருடருக்கிங், கனு

தினங் களவிலே நினைவுதன வணிகருக் காதாய மீது
நினைவு, தானமிகு குடியாள ருக்கெலாம் வேளாண்மை
தனி னினைவு கற்பவர்க்குத், தகு கல்வி மேனினைவு;
வேசியர்க் கினியபொரு டருவோர்கண்மீதுநினைவு, மான
பா னுக்குமரி யாதை கமே னினைவெற்கு மாறுதன் மீது
நினைவு, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலை
மேவு குமரேசனே. (கூ)

இவர்க்கிது வில்லையெனல்.

வேசைக்கு நிசமில்லை திருடனுக் குறவில்லை வேந்
தர்க்கு நன்றியில்லை, மிடியற்கு விலைமாதர் மீதுவந்
கணமிலை மிலேச்சற்கு நிறையதில்லை, ஆசைக்குவெட்க
மிலை ஞானியானவனுக்கு ளகமில்லை மூர்க்கன் றனக்,
கன்பில்லை காமிக்கு முறையில்லை குணமிலோற் கழ
கில்லை சித்தசுத்தன், பூசைக்கு நவிலங்க சுத்தியிலை
யாவுமுணர் புலவனுக் கயலோரிலை, புல்லனுக் கென்று
முசு தானுசித மில்லைவருபுலையற் கிரக்கமில்லை,மாசைத்
தவிர்ந்தமதி முகதெய்வ யானையொடு வள்ளிக் கிசைந்த
வழகா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலை
மேவு குமரேசனே. (௰)

இப்படிப்பட்டவ ரிவரெனல்.

ந்யாயநெறி தவறுமனுலகபரி பாலன நடத்துமவ
னே யரசனும், ராசயோசனைதெரிந் துறுதியாகிய செ
ய்தி நவிலுமவனே மந்திரி, நேயமுடனே தன் சரீர
த்தை யெண்ணாத நிர்வாகியே சூரனும், நிலைபெறு மிலக்
கண மிலக்கிய மறிந்துசொலு நிபுணகவியே கவிஞனும்,
ஆபதொரு வாகடந் தாதுவினி தானமு மறியுமதி
யோன் வைத்தியன், அகமின்றி மெய்யுணர்ந் தைம்புல
னொழித்து விட்டவனே மெஞ் ஞானியெனலாம், மாய
வர் சகோதரி மனோன்மணிக் கன்பான வரபுத்ர வடி
வேலவா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலை
மேவு குமரேசனே. (௰௧)

விரைந்தடக்கத் தகுவன விவையெனல்.

அக்கினியை வாய்மூர்க்க துர்ச்சனரை வஞ்சமனை யாளைவளர் பயிர்கொள்களையை, அஞ்சா விரோதிகளை யணியாய முடையோரை யகிர்த்தியப் பெண்களார்ப் பைக், கைக்கினிய தொழிலாளி யைக்கொண்ட வடிமை யைக் களவுசெய்யுந் திருடரைக், கருதிய விசாரத்தை யடக்கமில் பலிசையைக் கடிதான கோபந்தனை, மெய்க் கினித லாப்பிணியை யவையுதா சீனத்தை வினைமூண் டிடுஞ் சண்டையை, விஷமேறு கோரத்தை யன்றடக் குவதலான் மிஞ்சவிடலாகாதுகாண், மைக்கினியகண்ணி குற வள்ளிதெய் வானையை மணஞ்செய்த பேரழகனே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௰உ)

இவர்க்கிது துரும்பெனல்.

தாராள மாகக் கொடுக்குந் தியாகிக டமக்குநற் பொருள் துரும்பு, தன்னுயிரை யெண்ணாத சூரனுக் கெதிராளி தளமெலா மொருதுரும்பு, போரான பெரிய ருக்கற்பரது கையினிற் பிரயோசனந் துரும்பு, பெரி தான மோக்ஷசிந் தனையுள்ள வர்க்கெலாம் பெண்போக மொருதுரும்பு, தீராத சகலமும் வெறுத்ததுற விக்கு விறல் சேர்வேந்த னொருதுரும்பு, செய்யகலை நாமகள் கடாக்ஷமுள் ளோர்க்கெலாஞ் செந்தமிழ்க் கவிதுரும் பாம், வாராரு மணிகொண்முலை வள்ளிதெய் வானையை மணம்புணரும்வடிவேலவா, மயிலேறிவிளையாடுகுகனே புல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௰௩)

இதனை விளக்குவ திதுவெனல்.

புகல்விளக் குவதிரவி நிசிவிளக் குவதுமதி பார் விளக் குவதமேகம், பதிவிளக் குவதுபெண் குடிவிளக் குவதரசு பரிவிளக் குவதுவேகம், இகல் விளக் குவது வலி நிறைவிளக் குவதுநல மிசைவிளக் குவதுசுதியூ, ரிடம்விளக் குவதுகுடி யுடல்விளக் குவதுண்டி யினிய சொல் விளக்குவதருள், புகல்விளக் குவது கொடை

தலம்விளக் குவதறிவு பூவிளக் குவதுவாசம், பொருள் விளக் குவதுதிரு முசம்விளக் குவதுநகை புத்தியை விளக்குவது நூல், மகம்விளக்குவது மறை சொல்விளக் குவதுநிசம் வாவியைவிளக்குவது நீர், மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. ( )

பிறப்பிட நன்மையால் நன்மைபெருமை.

சிங்கார வனமதி லுதித்தினுங் காகமது தீஞ்சொல் புகல் குயிலாகுமோ, திரையெறியும் வாவியிற் பூத்தாலுமே கொட்டி செங்கஞ்ச மலராகுமோ, அங்கானகத்திற் பிறந்தாலு முயலான தானையின் கன்றாகுமோ, ஆண்மையாகிய நல்ல குடியிற் பிறந்தாலு மசடர்பெரியோராவரோ, சங்காடு பாற்கடல் பிறந்தாலு நத்தைதான் சாலக் கிராமமாமோ, தடமேவ கடனீரிலே யுப்பு விளையினுஞ் சாரசர்க்கரை யாகுமோ, மங்காத செந்தமிழ்க் குறுமுனிக் குபதேசம் வைத்தமெய்ஞ் ஞானகுருவே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடுமலை மேவு குமரேசனே. (௰௫)

பலர்க்கும் பயன்படுவன.

கொண்டல்பொழி மாரியு முதாரசற் குணமுடைய கோவுமே ருணியினீரும், கூட்டமிடு மம்பலத் துறுதருவினீழலுங் குடியாளர் விவசாயமும், கண்டவர்க ளெல்லாம் வரும்பெருஞ் சந்தியிற் கனிபல பழுத்த மாமும், கருணையுட னேவைத் திடுந்தணீர்ப் பந்தலுங் காவேரி போலூற்றமும், விண்டலந் துறைசந்தி ராதித்த கிரணமும் வீசுமாருத சீதமும், விவேகியெனு நல்லோரிடத்திலுறு செல்வமும் வெகுசனர்க் குபகாரமாம், வண்டிமிர்க டப்பமலர் மாலையணி செங்களப மார்பனே வடிவேலவா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௰௬)

தாமழியினுங் குணமழியாதவை.

தங்கமா னதுதழலி னின்றுருகி மறுகினுந் தன்னொளி மழுங்கிடாது, சந்தனக் குறடுதான் மெலிந்து

தேய்ந் தாலுமோ தன்மணங் குன்றிடாது, பொங்கமிகு சங்குசெந் தழலில்வெந் தாலுமோ பொலிவெண்மை குறைவுறாது, போதவே காய்ந்துநன்பால்குறுகினாலும் பொருந்துசுவை போய்விடாது, துங்கமணி சாணையிற் றேய்ந்து விட்டாலுந் துலங்குகுண மொளியாது பின், தொன்மைதரு பெரியோர் மடிந்தாலு மவர்களது தூய நிறை தவறுகுமோ, மங்களகல் யாணிகுற மங்கைசுர குஞ்சரியை மருவு திண் புயவாசனே,மயிலேறிவிளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௰௭)

நரகில் வீழ்வோர்.

மன்னரைச் சமரில்விட் டோடினவர் குருமொழி மறந்தவர் கொலைப்பாதகர், மாதா பிதாவைநிந் தித்தவர் கள் பாதார மருவித் திரிந்தபேர்கள், அன்னங் கொடு த்தபே ருக்கழிவை யெண்ணினோ ராசடக்கிய வமைச் சர், ஆலய மிகழ்ந்தவர்கள் விசுவாச காதக ரருந்தவர் தமைப்பழித்தோர், முன்னுதவியாய்ச்செய்த நன்றியை மறந்தவர் முகஸ்துதி வழக்குரைப்போர், முற்றுசிவ பத்தரை நடுங்கச் சினந்தவர்கண் முழுதும்பொ யுரை சொல்லுவோர், மன்னொருவர் வைத்தபொரு ளபகரித் தோரிவர்கண்மாநகரில் வீழ்வான்றோ, மயிலேறி விளை யாடு குகனேபுல் வயனீடுமலைமேவு குமரேசனே. ()

சரீரசுகம்.

மாதத் திரண்டுவிசை மாதரைப்புல்குவது மறுவறு விரோசனந்தான், வருஷத் திரண்டுவிசை தைலந் தலைக் கிடுதல் வாரத் திரண்டுவிசையாம், மூதறிவி னொடு தனது வயதினுக் கிளையவொரு மொய்க்குழலுடன் சை யோகம், முற்றுதயிர் காச்சுபா னீர்மோ ருருக்குநெய் முதிரா வழுக்கையிளநீர், சாதத்தி லெவ்வளவா னாலும் புசித்தபின் ருகந் தனக்குவாங்கல், தயையாக வுண்டபி னுலாவலிவை மேலவர் சரீர சுகமா மென்பர்காண்,மாத வகு மாரிசா ரங்கத் துதித்தகுற வள்ளிக் குகந்தசரசா

மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௰௬)

யார்க்குமனுபோகம் விடாமை.

தேசுபெறு மேருபிர தக்ஷிணஞ் செய்துமதி தேகவடு நீங்கவில்லை, திருமா லுறங்கிடுஞ் சேடனுக் குவணன் செறும்பகை யொழிந்ததில்லை, ஈசன் கழித்திலுறு பாம்பினுக் கிரைவேறிலாமலே வாயுவாகும், இனியகண்ணாகிவரு பரிதியா னவனுக் கிராகுவே கனவிரோதி, ஆசிலாப் பெரியோ ரிடத்தினி லடுக்கினு மமைத்தபடியன்றிவருமோ, அவரவர்க ளனுபோக மனுபவித்திடல் வேண்டு மல்லால் வெறுப்பதெவரை; வாசவனு மும்பரனை வரும்விசய சயவென்று வந்துதொழு தேத்துசரணு, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௨௰)

இதுவின்றி யிது சிறவாதெனல்.

குருவிலாவித்தை கூறிவிலா வாணிபங் குணமிலா மனைவியாசை, குடிநலமிலாநாடு நீதியில் லாவரசு குஞ்சர மிலாதவெம்போர், திருவிலா மெய்த்திறமை பொறையிலா மாதவந் தியானமில் லாதநிஷ்டை, தீபமில் லாதமனை சோதர மிலாதவுடல் சேகர மிலாதசென்னி, உருவிலா மெய்வளமை பசியிலா வுண்டிபுக லுண்மையில்லாதவசனம், யோசனையிலாமந்த்ரி தைரியமில்லாவீர முதவியில் லாதநட்பு, மருவிலா வண்ணமலர் பெரியோரிலாதசபை வையத் திருந்தென்பயன், மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. ()

பகைக்கப் படாதவ ரிவரெனல்.

அரசர்பகை யுந்தவம் புரிதபோ தனர்பகையு மரியகரு ணீகர்பகையும், அடுத்துக் கெடுப்போர் கொடும்பகையு முட்பகையு மருளிலாக் கொலைஞர் பகையும், விரகுமிகு மூரிலுள் ளோருடன் பகையுமிகு விகடப்ர சங்கிபகையும், வெகுசனப் பகையுமந் திரவாதி யின்பகையும் விழைமருத் துவர்கள்பகையும், உரமருவு கவி

வாணர் பகையுமாசான் பகையு முறவின்முறை யார்கள் பகையும், உற்றதிர வியமுளார் பகையுமந் திரிபகையு மொருசிறிது மாகாதுகாண், வரநதியின் மதலையென வினியசர வணமிசையில் வருதருண சிறுகுழவியே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (உஉ)

பேயெனப் படுவோ ரிவரெனல்.

கடனுதவு பேர்வந்து கேட்கும் வேளையின் முகங் கடுகடுக் கின்றபேயும், கனமருவு பெரியதனம் வந்தவுடனிறுமாந்து கண்விழிக் காதபேயும், அடைவுடன் சத்துருவின் பேச்சை விசுவாசித் தகப்பட் டுழன்றபேயும், ஆசைமனை யாளுக்கு நேசமா யுண்மைமொழி யானதை யுரைத்தபேயும், இடரிலா நல்லோர்கள் பெரியோர்களைச் சற்று மெண்ணு துரைத்த பேயும், இனியபரி தானத்திலாசைகொண் டொருவற் கிடுக்கண்செய் திட்டபேயும், மடமனை யிருக்கப் பரத்தையைப் புணர்பேயும் வசைபெற்ற பேய்களன்றோ, மயிலேறி விளையாடு குகனே புல் வயனீடு மலைமேவு குமரேசனே, (உங)

அவ்வவ் வினத்தி லுயர்ந்தவை.

தாருவிற் சந்தான நதியினிற் கங்கைவிர தத்தினிற் சோமவாரம், தகைபெறு நிலத்தினிற் காஸ்மீர கண்டந் தலத்திற் சிதம்பாதலம், சீருலவு ரிஷிகளில் வசிட்டர் பசு விற்காம தேனுமுனி வரினாதன், செல்வநவ மணிகளிற் றிகழ்பதும ராகமணி தேமலரி லம்போருகம் பேருலவு கற்பினி லருந்ததி சுதித்திடு பெலத்தின்மாருதம்பானையிற், பேசிலை ராவதந் தமிழினி லகத்தியம் பிரணவம் மந்திரத்தில், வாரிதியிலே திருப் பாற்கடல் குவட்டினின் மகாமேரு வாகுமன்றோ, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (உச)

அவரவர்க்குப் பெலமாவன.

அந்தணர்க் குயர்வேதமே பெலங் கொற்றவர்க் கரிய சௌரியமேபெலம், ஆனவணி கர்க்குநிதியே பெ

லிஞ் சூத்திரர்க் காயினே ருழவேபெலம், மந்திரிக்குச் சது ருபாயமே பெலநீதி மானுக்கு நடுவேபெலம், மாதவர்க் குத்தபசு பெருமை வியர்க்குநிறை மானமிகு கற்பேபெலம், தந்திர மிகுத்தகன சேவகர் தமக்கெலாஞ் சாமிகாரியமேபெலம், சான்றவர்க்குப் பொறுமையேபெலம் புலவோர் தமக்குநிறை கல்விபெலமாம், வந்தனை செயும்பூசை செய்பவர்க் கன்புபெலம் வாலவடிவானவேலா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (உ௫)

இருந்தும் பயன் படாதவை.

தருணத்தி லுதவிசெய்யாத நட்பாளர்பின் றந்தென தராமலென்ன, தராதர மறிந்துமுறை செய்யாத மன்னரைச் சார்ந்தென்ன நீங்கிலென்ன, பெருமையுடனுண்மையில் லாதவொரு பிள்ளையைப் பெற்றென பெறாமலென்ன, பிரியமா யுள்ளன்பி லாதவர்க ணேசம் பிடித்தென விடுக்கிலென்ன, தெருளாகமானமில்லாதவொரு சீவனஞ் செய்தென செயாமலென்ன, தேகியெனவருபவர்க் கீயாதசெல்வஞ் சிறந்தென முறிந்துமென்ன, மருவிளமை தன்னிலில் லாதகன்னிகை பின்பு வந்தென வாராமலென்ன, மயிலேறி விளையாடு குகனே புல் வயனீடு மலைமேவு குமரேசனே. (உ௬)

உபகாரமில்லாதவை.

கடனீர் மிகுந்தென்ன வொதிதான் பெருத்தென்ன காட்டிலவு மலரிலென்ன, கருவேல்பழுத்தென்னநாய்ப் பால் சுரந்தென்ன கானின்மழை பெய்துமென்ன, அடர் கழுதைதலத்திநில மெல்லாங் குவிந்தென்ன வரியகுணமில்லாதபெண், அழகா யிருந்தென்ன வாஸ்தான கோழைபல வரியநூ லோதியென்ன, திடமினிய பூதம் வெகு பொன்காத் திருந்தென்ன திறன்மிகுங் காடிமயிர்தான், செறிவாகி நீண்டென்ன வஸ்த்ரபூஷணமெலாஞ் சித்திரத் துற்றுமென்ன, மடமிதந் தெவருக்கு

முபகார மில்லாத வம்பர்வாழ்வுக்கு நிகராம், மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே.

பதரெனப்படுவோர்.

தன்பெருமை சொல்லியே தன்னைப் புகழ்ந்தபதர் சமர்கண் டொளிக்கும்பதர், தக்கபெரி யோர்புத்தி கேளாத பதர்தோழர் தம்மொடுசலிக்கும்பதர், பின்புகாணா விடந் தன்னிலே புறணிபல பேசிக் களிக்கும்பதர், பெற்றதாய் தந்தைதுயர் படவாழ்ந் திருந்தபதர் பெண்புத்திகேட்கும்பதர், பொன்பண மிருக்கவே போயிரக் கின்றபதர் பொய்சாக்ஷி சொல்லும்பதர், புவியோர்நடத் தையை யிகழ்ந்தபதர் தன்மனைவி புணர்தல்வெளி யாக்கும்பதர், அன்புடனும் வேசையுடன் விபசரிக்கின்ற பதர் மனிதரிற் பதரென்பர்காண், மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௨௮)

காணாவிடத் துயரப்படுமவை.

இரவிகாணா வனச மாரி காணாத பயி ரிந்துகாணாத குமுதம், ஏந்தல்காணா நாடு கணைகள்காணா வேட்டமின் சொல்காணா விருந்து, சுரபிகாணாத கன் றன்னைக்காணா மதலை சோலைகாணாத வண்டு, தோழர்காணா நேயர்கலைகள்காணாத மான் சோடுகாணாத பேடு, குரவர்காணா சபை தியாகிகாணா வறிஞர் கொழுநர்காணாத பெண்கள், கொண்டல்காணாத மயில் சிறுவர்காணாவாழ்வு கோடைகாணாத குயில்கள், வரவுகாணாத் செலவி வையெலாம் புவிமீதில் வாழ்வுகாணா விளமையாம், மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௨௯)

வியாதி மூலங்கள்.

கல்லினுடன் மயிரினுடன் மீனுடன் விரும்பலாற் கருதிய விசாரத்தினால், கடுவழி நடக்கையான் மலசல மடக்கையாற் கனிபழங் கறியுண்ணலால், நெல்லினொ டுமியினொ டுண்டபின் மூழ்கலா னித்திரைக ளில்லாமையால்,

நீர்ப்பகையி னூற்பனிக் காற்றினுட னேகலா னீடுசரு
இலை யூறலால், மெல்லி நல்லார்கலவி யதிகமும் விரும்
பலால் விழ்மலஞ் சிக்கு கையினால், மிகுசுமை யெடுத்
தலா லிளவெயிற் காய்தலா னெய்யாட வேலைசெய
லால், வல்லிரவிலே கயிர்கள் சாகாதி யுண்ணலால் வன்
பிணிக் கிடமென்பர்காண், மயிலேறி விளையாடு குகனே
புல் வயனீடு மலைமேவு குமரேசனே (௬௰)

செத்துஞ் சாகாதவர்.

அனைவர்க்கு முபகார மாம்வாவி கூவமுண் டாக்கி
னோர் நீதிமன்னர், அழியாத தேவாலயங்கட்டி வைத்
துளோ ரகரங்கள் செய்தபெரியோர், தனையொப்பிலாப்
புதல்வனைப்பெற்ற பேர்பொருது சமர்வென்ற சுத்த
வீரர், தாணிதனி னிலைனிற்க வென்றுறு மாறாத தரு
மங்கள் செய்த பேர்கள், கனவித்தை கொண்டவர்க
ளோயாத கொடையாளர் காவியஞ் செய்தகவினர், கற்
பினின் மிகுந்தவொரு பத்தினி மடந்தைகயைக் கடிம
ணஞ் செய்தோர்களிம், பனிர்கள் சரீரங்கள் போகி
னுஞ் சாகாத மனிதரென் றாகுமன் றோ, மயிலேறி விளை
யாடு குகனேபுல்வயனீடு மலைமேவு குமரேசனே. (௬௧)

சாகாதிருந்துஞ் செத்தவர்.

மாறாத வறுமையோர் தீராத பிணியாளர் வருவேட்
டகத்தி லுண்போர், மனைவியை யிழந்தியே சீவனஞ்
செய்குவோர் மன்னுமொரு ராஜசபையில், தூறாக நிந்
தைசெய் துய்குவோர் சிவிகைகள் சுமந்தே பிழைக்
கின்றபேர், தொலையாவிசாரத் தழுந்துவோர் வார்த்தை
யிற் சோர்வுபட லுற்றபேரியோர், விறுக மனையா
ளுக்கஞ்சி வந்திடு விருந்தினை யொழித்து விடுவோர்,
வீம்புடன் செல்லாத விவகார மதுகொண்டு மிக்கசபை
யேறுமசடர், மாறாக விவேளை முயிருடன் செத்தசவ
மாகியொளி மாய்வர்கண்டாய், மயிலேறி விளையாடு குக
னேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௬௨)

சிறிதும் பயன்படாதவர்.

பதாரகி னுங்கன விபூதி விளைவிக்கும் பழமைபெறு சுவாரகிலும், பலருக்கு மறைவாகு மாரிடுஞ் சிடுமலம் பன்றிகட் குபயோகமாம், கதமிகுகடா வென்னினுழுது புவி காக்குமவன் கழுதையும் பொதி சுமக்கும், கல்லெ ணினி றேவர்களு மாலயமு மாம்பெருங் கான்புற்று மாவமணையாம், இதமிலாச் சவமாகி னுஞ்சிலர்க் குதவி செயு மிழிவுறு குரங்காயினும், இரக்கப் பிடித்தவர்க் குதவிசெயும் வாருகோ லேற்றமாளிகை விளக்கும்,மத மது மிகும்பாம லோபரா னுபகார மற்றொருவ ருக்கு முண்டோ, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௬௩)

உலுத்த ரியல்பு.

திரவியங் காக்குமொரு பூதங்கள் போற்பணந் தேடிப் புதைத்துவைப்பார், சிலநல மாகவுங் கட்டார்க ணல்லமுது செய்துணா ரறமுஞ்செயார், புரவலர் செய் தண்டந் தனக்கும் வலுவாகப் புகுந்திருட ருக்குமீவார், புலவரைக் கண்டவுட னேடிப் பதுங்குவர் புராணிகர்க் கொன்றுமுதவார், விரகறிந்தே பிள்ளை சோறுகறி தினுமளவில் வெகுபணம் செலவாதலால், விளையாடு கிழவனும் பிள்ளையே பிள்ளையென மிகுசெட்டிசொன்ன கதைபோல், வரவு பார்க்கின்றதே யல்லாது லோபியர் கண் மற்றொருவருக் கீவரோ,மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௬௪)

திருவாழிடங்கள்.

கடவா ரணத்திலுங் கங்கா சலத்திலுங் கமலாசனந் தன்னிலும், காகுத்தன் மார்பிலுங் கொற்றவ ரிடத்திலுங் காவியின் கூட்டத்திலும், நடமாடி பரியிலும் பொய்வார்த்தை சொல்லாத நல்லோ ரிடந்தன்னிலும், நல்லசுப லக்ஷண மிகுந்தமனை தன்னிலும் ரணசுத்த வீரர்பாலும், அடர்கே தனத்திலுஞ் சுயம்வரந் தன்

ணிலு மருந்துளசி வில்வத்திலும், அலர்தரு கடப்ப மலர் தனிலு மிரதத்திலு மதிககுண மானரூப, மடவா ரிடத்திலுங் குடிகொண்டு திருமாது மாரு திருப்ப ளன்றோ, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலை மேவு குமரேசனே. (௰௫)

மூதேவி வாழிடங்கள்.

சோரமங்கையர் கணிகை முறையார்கள் வாயினிற் சூதகப் பெண்க ணிழலில், சூளையிற் சூழ்கலுறு புகை யிற்களே பாஞ் சுடுபுகையி னீசர்னிழலில், காரிரவி லாசுநிழ லிற்கடா நிழலினொடு கருதிய விளக்கு நிழ லில், காமுகரி னிஷ்டையில் லாதவர் முகத்திற் சுடுஞ் சினத் தோர்சபையினில், ஈரமில்லாக் களர் நிலத்தினி லிராத்திரியி லிழியுமது பானர்பாலில், இலைவேல் விளா நிழலி னிதமழுக் கடைமனையி லேனகா யசகரத்துள், வாரிய முறத்தூள் பெருக்குதூண் மூதேவி மாரு திரு ப்ப ளென்பார், மயிலேறி விளையாடு குகனேபுல் வய னீடு மலைமேவு குமரேசனே. (௰௬)

திருத்தினுந் திருந்தாமை.

கட்டியெரு விட்டுச் செழுந்தேனை வார்க்கினுங்காஞ் சிரங் கைப்புவிடுமோ, கழுதையைக் கட்டிவைத் தோ மம் வளர்க்கினுங் கதிபெருங் குதிரையாமோ, குட்டியா வுக் கமுதளித்தே வளர்க்கினுங் கொடுவிஷ மலாது தரு மோ, குக்கனெடுவாலுக்குமட்டையைக் கட்டினுங்கோ ணமலேநிமிருமோ, ஒட்டியே குறுணிமையிட்டாலுநய மிலா யோனிகண் ணாகிவிடுமோ, உலவுகன கற்பூர வாடைபல கூட்டினு முள்ளியின்குணமாறுமோ, மட்டி கட் காயிரம் புத்திசொன்னாலுமதின் மார்க்கமறி யாதை வருமோ, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவுகுமரேசனே. (௰௭)

குறிப்பறிதல்.

மனதிற் கடும்பகை முகத்தினு லறியலா மானிலப் பூடுகளெலாம், மழையினு லறியலா நல்லார் பொலார்

சுமை மக்களா லறியலாகும், கனமருவு சூரரைச் சமரிஞ லறியலாங் கற்றவொரு வித்துவானைக், கல்விப்ர சங்கத்தி னலறியலாங் குணங் சீனநடையி னலறிய லாம், தனதக மடுத்தது பளிங்கின லறியலாஞ் சாதி சொல்லா லறியலாம், தருநீதி கேள்வியா லறியலாம் பிணிகளைத் தாதுக்களாலறியலாம், வனசவிக சிதவதன பரிபூர ணனந்த வாலவடி வானவேலா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடுமலைமேவுகுமரேசனே. (௩அ)

குணமாருமை.

குணமிலாத் துஷ்ட மிருகங்களையு நயகுணங் கொண்டுட் படுத்திவிடலாம், கொடியபல விஷநோய்க ளியாவு மௌஷதமது கொடுத்துத் திருப்பிவிடலாம், உணர்விலாப் பிரமராக்ஷச முதற் பேய்களை யுகந்துகூத் தாட்டிவிடலாம், உபாயத்தினற் பெரும் பறவைக்கு நற்புத்தி யுண்டாக்கலா முயிர்பெறப், பிணமதை யெழுப்பலா மக்கினி சுடாமற் பெரும்புனலெனச் செய்ய லாம், பிணியையு மகற்றலாங் காலதூது வரையும் பின்புவரு கென்றுசொலலாம், மணலையுங் கயிறுத்திரிக் கலாங் கயவர்குண மட்டுந் திருப்பவசமோ, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே.

இத்திக்குணத்தோரில் விலங்கு போல்வரெனல்.

தான்பிடித்தது பிடிப் பென்றுமேலவர் புத்தி தள்ளிச் செய்வோர் குரங்கு, சபையிற்குறிப் பறிய மாட்டாமனின்றவர் தாம்பயனிலாதமரமாம், வீம்பினு லெளியவரை யெதிர்பண்ணி னிற்குமொரு வெறியர்குரை ஞமலியாவார், மிகநாடி வருமேவார் முகம் பார்த்திடா லோபர் மேன்மையில்லாத கழுதை, சோம்பலோடு பெரியோர் சபைக்குட் படுத்திடுந் தூங்கலே சண்டிக்கடா, சூதுட னடுத்தோர்க் கிடுக்கணே செய்திடுந் துஷ்டனே கொட்டுதேளாம், மாம்பழந் தனைவேண்டி

யங்காளி லீசனை வலமாக வந்தமுருகா, மயிலேறி விளை யாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௪௰)

அற்பர் வாழ்வால் குணம் வேறுபடுதல்.

அற்பர்க்கு வாழ்வுசற் றதிகமானால் விழிக்கியாவ ருருவுந் தோன்றிடா, தண்டிநின்றே நல்ல வார்த்தைகளுரைத்தாலு மவர்செவிக் கேறிடாது, முற்பக்ஷமான பேர் வருகினும் வாருமென மொழியவும் வாய்வராது, மோதியே வாதப் பிடிப்புவந் ததுபோல முன்காலை யகலவைப்பார், விற்பன மிகுத்தபெரி யோர்செய்தி சொன்னாலும் வெடுவெடுத் தேசிநிற்பார், விருநாமகத் துவப் பேயது சவுக்கடி விழும்போது தீருமென்பார், மற்புயந் தனினீப மாலைபணி லோலனே மார்பனே வடிவேலவா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௪௧)

தீங்குளோ ரிக்கோள் போல்வரெனல்.

அன்னை தந்தையர் புத்தி கேளாத பிள்ளையோ வஷ்டமச் சனியாகுவான், அஞ்சாம லெதிர்பேசிநிற்கு மனையாள்வாக்கி லங்காரகச் சென்மமாம், கன்னமிஞ்சிச் சொன்ன வார்த்தை கேளாவடிமை சந்திராஷ்டக மென்னலாம், தன்பங்கு தாவென்று சபையேறு தம்பியோ சார்ந்தசென்மச் சூரியன், நன்னய மிலாத வஞ்சனைசெய்த தமையன் மூன்றுமிடத்தில் வியாழம், நாடோறும் விரோதமிடு கொண்டோன் கொடுத்துளோன் ராகு கேதுக்க ளெனலாம், மன்னவனை யன்றுசிறை தனிவிட்டு நம்பற்கு மந்திர முரைத்த குருவே, மயிலேறிவிளை யாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௪௨)

நல்லினஞ் சேர்பயன்.

சந்தன விருட்சத்தை யண்டினிற் கின்றபல தருவு மவ் வாசனைதரும், தங்கமக மேருவை யடுத்திடுங் காக்கையுஞ் சாயல்பொன் மயமேதரும், பந்தமிகு பாலுடன் விளாவியதண் ணீரெலாம் பால்போ னிறங்கொடுக்

கும், படிகமணி கட்குளே நிற்கின்ற வடமு மப்படியே குணங் கொடுக்கும், அங்கமிகு மாகதக் கல்லைத் தரித்திடி லடுத்ததும் பசுமையாகும், ஆனபெரி யோர்களொடு சகவாச மதுசெய்யி லவர்கள் குணம் வருமென்பர்காண், மந்திர நெடுங்கிரியின் முன்கடல் கடைந்தவரி மருகமெய்ஞ் ஞானமுருகா,மயிலேறிவிளையாடு குகனே புல் வயனீடு மலைமேவு குமரேசனே. (சங)

வலியோரையு மூழ்விடாமை.

அன்றுமுடி சூடுவ திருக்க சகுராமன்மு னருங்காடுறைந்ததென்ன, அண்டரெல் லாமமிர்த முண்டிடப் பாமனுக் காலம் லபித்ததென்ன, வென்றிவரு தேவர் சிறைமீட்டநீ ளவில்வே டிச்சியைச் சேர்ந்ததென்ன, மேதினி படைக்குமய னுக்கொரு சிறம்போகி வெஞ்சிறையி லுற்றதென்ன, என்றுமொரு பொய்சொலா மன்னவன் விலைபோன தென்னகாண் வல்லமையினல், எண்ணத்தி லொன்றும்வாராது பரமசிவ னெத்தனப் படிமுடியுமாம், மன்றுதனி நடனமிடு கங்கா தான் பெற்ற வரபுத்ர வடிவேலவா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (சச)

பெரியோர் வாக்கியபரிபாலனஞ் செய்தோர்.

தந்தைதாய் வாக்யபரி பாலனஞ் செய்தவன் றசாத குமாரராமன், தமையனரும் வாக்யபரி பாலனஞ் செய்தோர் தருமனுக் கிளையநால்வர், சிந்தையி லுணர்ந்துகுரு வாக்யபரி பாலனஞ் செய்தவ னரிச்சந்திரன், தேகியென் றோர்க்கிலை யெனுவாக்ய பாலனஞ் செய்தவன் றானகர்னன், நிந்தைதவிர் வாக்யபரிபாலனஞ் செய்தவ னீள்பெல மிகுத்தவனுமான், நிறையுடன் பத்தாவின் வாக்யபரி பாலன நிலத்திலு ளாகினிசெய்தாள், மந்தை வழி கோயில் தளமுங் குலவு தும்பிமுகன் மகிழ்தர வுகந்ததுணைவா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (சரு)

முயற்சியின் மிக்க தூழெனல்.

வங்காள மேருகினும் வாருகோ லொருகாசு மட்டன்றி யதிகமாமோ, வானேறி யுயரப்பறந்தாலு மூர்க்குருவி வண்ணப் பருந்தாகுமோ, கங்கா சலத்தினின் மூழ்கினும் பேச்சுரைக் காய்நல்ல சுரையாகுமோ, கடலுக்கு ளூழியை யமுக்கியே மொண்டிடிற் காணுமோ நாழிதான், ஐங்காத மோடினுந் தன்வினைக டன்னோடு வடையாம னீங்கிவிடுமோ, ஆரிடஞ்சென்றாலும் வெகுதொலைகள் சுற்றினு மமைத்தபடி யன்றி வருமோ, மங்காத செந்தமிழ்க் கொண்டுநற் கீரர்க்கு வந்ததுயர் தீர்த்தமுருகா, மயிலேறி விளையாடு குகனே புல் வயனீடு மலைமேவு குமரேசனே. (சகு)

இடும்பா லழிவு.

சூரபத்மன் பெலமு மிராவணன் றீரமுந் துடுக்கான கஞ்சன் வலியும், துடியான விரணியன் வரப்ரசாதங்களுந் தொலையாத வாலிதிடமும், பாரமிகு துரியோதனதிநூற் றுவரது பராக்கிரம மதுகைடவர், பாரிப்புமாபெலித ணுண்மையுஞ் சோமுகன் பாங்கிலுறு வல்லமைகளும், ஏரணவு கீசகன் கனதையுந் திரிபுர ரெண்ணமுந் தக்கனெழிலும், இவர்களது சம்பத்து நின்றவோ வவரவ ரிடும்பா லழிந்த தன்றோ, மாரனைக் கண்ணு லெரித்தருள் சிவன்றந்த வரபுத்ர வடிவேலவா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (சஎ)

நட்புநிலை.

மாமதியின் முயலான ததுதேய்வு றுத்தேய்ந்து வளருமப் போதுவளரும், வாவிதனி லாம்பல்கொடிகளதனி னீர்வற்றின் வற்றிடும் பெருகிலுயரும், பூமருவு புதல்பூடு கோடையிற் றீய்ந்திடும் பொங்குகாலந் தழைக்கும், புண்டரிக மிரவிபோ மளவிற்கு விந்திடும்போதுதய மாகின்மலரும், தேமுட விளக்கிலுயிர் கூடவுமிளை

க்குமது தேறிலுயிருஞ் சிறக்கும், சேர்ந்தோர்க் கிடுக்கணது வந்தாலு நல்லோர் சிநேகமப்படியாகுமே, வாமன ஸ்வரூபமத யானைமுக னுக்கிளைய வாலகுருபரவேலவா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (சஅ)

கைப்பலனுமவை.

பருவத்திலே பெற்ற சேயும் புரட்டாசி பாதிசம்பா நடுகையும். பாலமிளிப வாடிகனில லைவால் போலவே பயிர்கொண்டு வருகரும்பும், கருணைபொடு மிக்கநாணய முள்ளோர் கையினிற கடனிட்டு வைத்தமுதலும், காலமது நேறிற் றனக்குறுதியாகமுன் கற்றுணர்ந்திடுகல்வியும், விருதாசனைக்கண்டு பழகிய சிநேகமும்விவேகிக் குபகாரமாம, வீணல்ல விவையெலாங் கைப்பலனதாகவபி விர்த்தியாய் வருமெனபர்காண், மருவுலாவியநீப மாலையுந் தண்டாள மாலையும் புனைமார்பனே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (சகூ)

சமயத்துக்குதவாதவை.

கல்லாத புஸ்தகந் தனிலெழுதி வீட்டினிற் கட்டிவைத்திடு மிக்கையும், காலங்களுக்குதவ வேண்டுமென் றன்னியன் கையிற்கொடுத்த பொருளும், இல்லாளை நீங்கியே பிறர்பாரி சகமென் றிருக்கின்ற குடிவாழ்க்கையும், ஏறுமாறாகவே தேசாந் தரம்போயிருக்கின்ற பிள்ளைவாழ்வும், சொல்லான தொன்றுமவர் மனமான தொன்றுமாய்ச் சொல்லும் வஞ்சகர்நேசமும், சுகிர்தமா யுண்டென் றிருப்பதிகல் லாந்தருண துரிதத்திலுதவாதுகாண், வல்லான கொங்கைபட மாது தெய்வானைகுற வள்ளிபங் காளனேயா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (ருO)

திரும்பமாட்டாதவை.

ஆடரவின் வாயினிலகப்பட்ட தவளையு மானைவாயிற் கரும்பும், அரிதான கப்பலிற் பாய்மாக் காற்றினி

லாப்பட்ட மெலிகாக்கையும், நாடரிய வேதாளை வார்த்துக் கொடுத்தது நமன்கைக்கு ளானவுயிரும், நலமாகவேயணை கடந்திட்ட வெள்ளமு நாய்வேட்டை பட்ட முசலும், தேடியுண்பார் கைக்கு ளானபல வுடைமையுந் திவாதையான மனையும், திரள்கொடுங் கோலரசர் கைக்கேறு பொருளுந் திரும்பிவாரா வென்பர்காண், மாடமிசை யன்னக் கொடித்திரள்கொள் சோணாடு வாழவந்திடு முதல்வனே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௫௧)

இதினுமிது நன்றென்பவை.

கடுகடுத் தாயிரஞ் செய்குவ தினின்சொலாற் களிகொண் டழைத்தனன்று, கனவெள்ளி யாயிரஞ் செய்வதிற் பொய்யுரை கருக்கொடு சொலாமைநன்று, வெடுவெடுக் கின்றதோ ரவிவேகி யுறவினில் விவேகியொடு பகைமைநன்று, வெகுமதிக ளாயிரஞ் செய்வதினைக் காசவெனீர் கண் டிதயநன்று, சடுதியிற் பக்குவஞ் சொல்லுந் தொடைக்கிக்கு சற்றுமிலை யன்னனன்று, சம்பத்துடன் பிணியின் மெலிதுயதினேயற்ற தாரித் திரிய நன்றுகாண், மடுவினிற் கரிபோல மென்னவந் தருள்செய்த மான்மருகனா முதல்வனே, மயிலேறிவிளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௫௨)

பலகூடினு மொன்றிற்கீடாகாதவை.

தாரகைக ளொருகோடி வானத்திருக்கினுஞ் சந்திரற் கீடாகுமோ, காருவிற் கொடிதோர்கள் பலகூடினுமொரு கம்பட்டவேசைபாமோ, கோரமிகுபன்றியின் குட்டிபல கூடினொரு குஞ்சரக் கன்றாகுமோ, கொட்டிமலர் வாவியிற பலகூடினுமொரு கோகனக மலராகுமோ, பாரமிகுமாமலைகள் பலகூடினுமொரு பைம்பொன்மக மேருவாமோ, பலனிலாப் பிள்ளைகளனேகம் பிறந்தாலிற் பணிந்தருவ னுக்குநிகரோ, வாரணக் கொடியொரு கரத்திற் பிடித்தொன்றில் வடி

வே லணிந்தமுருகா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலேமேவு குமரேசனே. (ருங)

அருமை யறிதல்.

மணமாலை யருமையாய்ப் புணைபவர்களே யறிவர் மட்டின் குரங்கறியுமோ, மக்களுடை யருமையைப் பெற்றவர்களே யறிவர் மலடிதா னறிவதுண்டோ, கணவருடை யருமையைக் கற்பானமாதறிவள் கணிகையானவ ளறிவளோ, கருதுமொரு சந்தியின் பாண்டமென் பதை வருங் களவான நாயறியுமோ, குணமான கிளியருமை தனைவளர்த் தவரறிவர் கொடியபூனையு மறியுமோ, குலவுபெரி யோரருமை நல்லோர்களே யறிவர் கொடுமூடர் தாமறிவரோ, மணவாள நீயென்று குறவள்ளி பின்றொடர வனமூடு தழுவுமழகா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலேமேவு குமரேசனே.

தீச்சார்பாற் பயன்படாதவை.

மடுவினிற் கஞ்சமல ருண்டொருவ ருணுகாமல் வன்முதலை யங்கிருக்கும், மலையினிற் றேனுண்டு சென்றொருவர் கிட்டாமன் மருவியதில் வண்டிருக்கும், நெடுமைதிகழ் தாழைமல ருண்டொருவ ருணுகாம னீங்காத முள்ளிருக்கும், நீடுபல சந்தனவிருக்ஷமுண் டணுகாது நீளரவு சூழ்ந்திருக்கும், குடிமல்கி வாழ்கின்ற வீட்டினிற் செல்லாது குரைநாய்க ளங்கிருக்கும், கொடுக்குந் தியாகியுண் டிடையூறு பேசுங் கொடும்பாவியுண்டுகண்டாய், வடிவையுங் கடுவையும் பொருவுமிரு கண்ணிகுற வள்ளிக் குகந்தகணவா, மயிலேறி விளையாடுகுகனேபுல் வயனீடு மலேமேவு குமரேசனே. (ருரு)

கணிகையரிழிபு.

தேவதாசிகள் வீடு சந்தைப் பெரும்பேட்டை சேர்ந்திடு படுக்கைவீடு, தெருவாசல் கட்டில்பொது வம்பல முடுத்ததுகில் செய்யகூ தாடுசாலை, மேவலாகிய கொங்கை கையாடு திரள்பந்து விழிமனங் கவர்தூண்டி

ளாம், மிக்கமொழி நீர்மே லெழுத்ததிக மோகமொரு மின்னலிரு துடைசர்ப்பமாம், ஆவலாகிய வல்கு லோ தண்டம் வாங்குமிட மதிகபட மாமனதுகல், அமிர்தவா யிதழ்சித்திர சாலைபெச்சிற் குழி யவர்க்காசை வைக்க லாமோ, மாவடிவு கொண்டே யொளித்தவொரு சூரனை வதைத்தவடி வேலாயுதா, மயிலேறி விளையாடுகுகனே புல் வயனீடு மலைமேவு குமரேசனே. (ருசு)

கலிகாலக் கொடுமை.

தாய்புத்தி சொன்னான் மறுத்திடுங் காலமுயர் தந்தையைச் சீறுகாலம், சற்குருவை நிந்தைசெய் காலமெய்க் கடவுளைச் சற்றுமெண்ணாத காலம், பேய்தெய்வ மென்றுப சரித்திடுங் காலம் புரட்டருக் கேற்ற காலம், பெண்டாட்டி வையினுங் கேட்கின்ற காலநற் பெரியர்சொல் கொளாதகாலம், தேய்வுடன் பெரியவன் சிறுமையுறு காலமிகு சிறியவன் பெருகுகாலம், செருவில்விட் டோடினோர் வரிசைபெறு காலம்வசை செப்புவோர்க் குதவுகாலம், வாய்மதம் பேசிவிடு மனியாய காரர்க்கு வாய்ந்தகலி காலமையா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (ருஎ)

அவரவர்க் குரியவை.

கல்வியொடு கனமுறச் சபையின்மேல் வட்டமாக் காணவைப் போன் பிதாவாம், கற்றுணர்ந்தே தனது புகழால் பிதாவைப் ப்ரகாசஞ் செய்வோன் புத்திரன், செல்வமிகு கணவனை தெய்வமென் றனுதினஞ் சிந்தை செய்பவள் மனைவியாம், சினேகிதன் போலவே யன்புவைத் துண்மைமொழி செப்புமவனே சோதரன், தொல்வள மிகுந்தநூற் கலைதெரிந் துறுதிமொழி சொல்லுமவனே குரவனாம், சொன்னநெறி தவறாமல் வழிபாடு செய்துவரு தூயனே யினியசீடன், வல்லி மகிழ்ந்துசுர குஞ்சரி யுடன்குறவர் வஞ்சியை மணந்த கணவா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (ருஅ)

சிறுமையிற் பெருமை.

சேற்றிற் பிறந்திடுங் கமலமலர் கடவுளது திருமுடியின் மேலிருக்கும், திகழ்சிப்பி யுடலிற் சனித்தமுத் தரசனது தேகத்தின் மேலிருக்கும், போற்றியிடு பூச்சியின் வாயினூல் பட்டென்று பூசைக்கு நேசமாகும், புகலரிய வண்டெச்சி லானதேன் றேவர்கொள் புனிதவபி ஷேகமாகும், சாற்றிய புலாலொடு பிறந்த கோரோசனை சவாதுபுழு கணைவர்க்குமாம், சாதியீனத்திற் பிறக்கினுங் கற்றோர்கள் சபையின்மேல் வட்டமன்றோ, மாற்றிச் சுரத்தினை விபூதியா லுடல்குளிர வைத்த மெய்ஞ் ஞானமுதலே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௫௯)

செய்யத் தகாதவை.

தானு சரித்துவரு தெய்வமிது வென்று பொய்ச் சத்தியஞ் செயில் விடாது, தன்வீட்டிலேற்றிய விளக்கென்று முத்தந் தனைக்கொடுத்தா லதுசுடும், ஆனாலுமேலவர்கண் மெத்தவுந் தனதென் றடாதது செயிற்கெடுதியாம், ஆனைதான் மெத்தப் பழக்கமானாலுஞ் செயாது செய்தாற் கொன்றிடும், தீனான தினிதென்று மீதூண் விரும்பினாற் றேகபீடைகளே தரும், செகராசர் மனுவென்ன வேலாத காரியஞ் செய்தான் மனம்பொறார்காண், வானுடு புகழுமொரு சோணாடு தழையவிவண் வந்தவ தரித்த முதலே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௬௰)

நடுவு நிலைமை.

வந்தவிவ காரத்தி லினியபரி தானங்கள் வருமென்று நேசரென்றும், வன்பகைஞ ரென்றுமய லோரென்று மிக்கதன வானென்று மேழையென்றும், இந்த வகையைக் குறித் தொருபக்ஷ பாதமோ ரெள்ளளவுரைத்திடாமல், எண்ணமுடனே லிகித புத்தியொடு சாக்ஷிக்கு மேற்கச் சபாசமதமா, முந்தவிரு தலையுஞ் சமன்செய்த கோல்போன் மொழிந்திடிற் றர்மமது

காண், முனிவிம னுடல்பாதி மிருகந் தனக்கென்று மூன்றருமர் சொன்ன தலமோ, மைந்தனென வென்று மை முலைப்பால் கொடுத்திட வளர்ந்தருள் குழந்தை வடிவே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (சுக)

பக்ஷபாதம்.

ஓரவிவ காரமா வந்தவர் முகம்பார்த் துரைப் போர் மலைக்குரங்காம், உயர்வெள் ளெருக்குடன் முளை த்துளிடு மவரில்ல முறையுமூர் பாழ்நத்தமாம், தாரணியி லிவர்கள்கிளை நெல்லியிலை போலுகுஞ் சமானமா வெழு பிறப்பும்,சந்ததி யிலாதுழல்வ ரவர்முகத்தினின் மூத்த தையலே குடியிருப்பாள், பாரமிவ ரென்றுபுவி மங்கையு நடுங்குவள் பழித்ததுர் மரணமாவர், பகர்முடிவி லேரவுர வாதிநர கத்தலு பவிப்ப ரெப்போது மென்பார், வாரமுட னருணகிரி நாதருக் கனுபூதிவைத் தெழுதி யருள்குருபரா, மயிலேறிவிளையாடுகுகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (சுஉ)

ஒன்றிலாமையாற் சிறவாதவை.

நோங்கை யில்லாதவட் கெத்தனைப் பணியுடைமை கூடினும் பெண்மையில்லை, கூறுநிறை கல்வியில் லாமலெத்தனை கவிதை கூறினும் புலமையில்லை, சங்கையில் லாதவர்க் கெத்தனை விவேகந் தரிக்கினுங் கனதை யில்லை, சட்சுவை பதார்த்த வகையுற்றுலு நெய்யிலாச் சாதமுந் திர்ப்தியில்லை, பங்கயமிலாமலெத் தனை மலர்கள் வாவியிற் பாரித்து மேன்மை யில்லை, பத்தியில் லாமல் வெகு நியமமா யர்ச்சனைகள் பண்ணினும் பூசையில்லை, மங்கைய ரிலாமனைக் கெத்தனை யருஞ் செல்வம்வரினுமில்வாழ்க்கையில்லை, மயிலேறிவிளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (சுஙு)

அளவு படாதவை.

வாரியா ழத்தையும் புனலெறியு மலைகளையு மானிடர்கள் சனனத் தையும், மன்னவர்க ணினைவையும்

புருஷர் யோகங்களையும் வானினுயர்நீளத்தையும், பாரி லெழு மணலையும் பல பிராணிகளையும் படியாண்ட மன் னவரையும், பருப்பதத் தின்னிறையு மீசுரச் செயலையும் பனிமாரி பொழிதுளியையும், சிறிய தமிழ்ப்புலவர் வாக் கிலெழு கவியையுஞ் சித்தர்தம துள்ளத்தையும், தெரி வையர்கள் சிந்தையையு மிவ்வள வெனும்படி தெரிந் தளவிடக் கூடுமோ, வாரிச மடந்தைகுடி கொண்ட நெடு மாலுக்கு மருகனென வந்தமுருகா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே.

பிறர்மனை நயத்தல்.

தந்தார மன்றியே பரதார மேனினைவு தனைவைத்த காமுகர்க்குத், தயையில்லை நிசமில்லை வெட்கமில்லை சமரி னிற் றைரியஞ் சற்றுமில்லை, அந்தார மில்லை தொடர் முறையில்லை நிலையில்லை யறிவில்லை மரபுமில்லை, யற மில்லை நிதியில்லை யிரவினிற் றனிவழிக் கச்சமோ மனதி லில்லை, நந்தாத சனமில்லை யினமில்லை யெவரு க்கு நட்பில்லை கனதையில்லை, நயமில்லை யிளமைதனில் வலிமையிலை முத்திபெறு ஞானமிலை யென்பர்கண் டாய், மந்தார பரிமள சுகந்தாதி புனையுமணி மார்பனே யருளாளனே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (கூரு)

மானம் விடாமை.

கனபரா மேறிற் பிளந்திடுவ தன்றியே கற்றூண் வளைந்திடாது, கருதலர்க ளாலுடைந் தாலுமுயி ரளவி லேகனசூர னமரின் முறியான், தினமோ ரிடுக்கண் வந் தாற்றலும் வேங்கைதான் சீவனளவிற்கொடாது, திரமான பெரியோர் சரீரங்கள் போகினுஞ் செப்பு முறை தவறிடார்கள், வனமேறு கவரிமா னுயிர்போகு மளவுந்தன் மயிரினொன் றுங் கொடாது, வாராத வாப த்து வருகினுங் கற்புடைய மாதுநிறை தவறிநடவாள், மனதார வுனதடைக் கலமென்ற பேர்க்கு வன்சிறை

தவிர்த்த முருகா, மயிலேறி விளையாடு குகனேபுல் வய னீடு மலைமேவு குமரேசனே. (கசு)

திருவருட் சிறப்பு.

திருமகள் கடாக்ஷமுண் டானா லெவர்க்குஞ் சிறப் புண்டு கனதையுண்டு, சென்றவழி யெல்லாம் பெரும் பாதை யாய்விடுஞ் செல்லாத வார்த்தை செல்லும், பொருளொரு துரும்புமரி யாதையாஞ் செல்வமோ புகல் பெறுக் காறுபோலாம், புலியின்முன் கண்டுமதி யாதபேர் பழகினவர் போலவே நேசமாவார், பெருமை யொடு சாதியி லுயர்ச்சிதரு மனுதினம் பேரும்பிர திஷ்டை யுண்டாம், பிரியமொடு பகையாளி கூட்டுற வாகுவான் பேச்சினிற் பிழைவராது, வருமென நினை த்த பொருள் கைகூடி வருமதிக வல்லமைகள் மிகவு முண்டாம், மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (கஎ)

நட்பு நிலை.

கதிரவ னுதிப்ப தெங்கே நளினமெங்கே களித் துள மலர்ந்ததென்ன, கார்மேக மெங்கே பசுந்தோகை யெங்கே கருத்தினட் பானதென்ன, மதியமெங்கே பெருங் குமுதமெங்கே முக மலர்ந்துமகிழ் கொண்ட தென்ன, வல்லிரவு விடிவதெங்கே கோழி யெங்கே மகிழ்ந்துகூ விடுகலென்ன, நிதியரச ரெங்கே யிருந் தாலு மவர்களொடு நேசமொன்றா யிருக்கும், நீதிமிகு நல்லோர்க ளெங்கிருந் தாலுமவர் நிறைபக்ஷ மறவார் கள்காண், மதிலுடன் கோபுரமும் வாவியும் புடைசூழ மருவுசோ ணாட்டதிபனே, மயிலேறிவிளையாடு குகனே புல் வயனீடு மலைமேவு குமரேசனே. (கஅ)

காலமறிதல்.

காகம் பகற்காலம் வென்றிடுங் கூகையைக் கனக முடி யரசர்தாமும், கருதுசய காலமது கண்டந்த வேளை யிற் காரியமுடித்து விடுவார், மேகமுங் கார்கால மது கண்டு பயிர்விளைய மேன்மேலு மாரிபொழியும், மிக்

கான வறிவுளோர் வருதருண காலத்தின் மிடியாளருக் குதவுவார், நாகரிக முறுகுயில் வசந்தகாலத்திலே நல மென் றுகந்துகூவும், நல்லோர் குறித்ததைப் பதரும லந்தந்த நாளையின் முடிப்பர்கண்டாய், வாகனைய காலை கன் மாலைபுல் லெனுமுலக வாடிக்கை நிச மல்லவோ, மயிலேறி விளையாடு குகனேடுல் வயனிடு மலைமேவு குமரேசனே. (௬௯)

இடனறிதல்.

தரையதனி லோடுதேர் நீள்கடலி லோடுமோ சல மிசை யோடுகப்பல், தரைமீதி லோடுமோ தண்ணீரி லுறுமுதலை தன்முனைகரி நிற்குமோ, விரைமலர் முடிப்பமர் வேணியர விளைவெல்ல மிகுகருடனுலாகுமோ, வேங்கைக ளிருக்கின்ற காடுதனி லஞ்சாமல் வேறொருவர் செல்லவசமோ, துரைகளைப் பெரியோரை யண்டிவாழ் வோர்தமைத் துஷ்டர்பகை யென்ன செய்யும், துணைகண்டு சேரிட மறிந்துசே ரொன்றெளவை சொன்னகதை பொய்யல்லவே, வரையூது மாயனை யடுத்தலாற் பஞ்சவர்கள் வன்போர் செயித்ததன்றோ, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனிடு மலைமேவு குமரேசனே. (௭௰)

யாக்கை நிலையாமை.

மனுநன்மாந் தாதாமு னனவர்க ளெல்லாரு மண்மே லிருந்து வாழ்ந்து, மடியா திருந்தபே ரில்லை யவர் தேடியதை வாரிவைத் தவருமில்லை, பணியதனை நம்பியே யேர்பூட்டு கதையெனப் பாழான வுடலைநம்பிப், பார்மீதி லின்னம்வெகு நாளிருப்போ மென்று பல கோடி நினைவையெண்ணி, அனிதமாய்விருதாவின் மாய் வதே யல்லாம லன்பாக நின்பதத்தை, யார்ச்சித்து முத்திபெறல் வேண்டுமென் றெண்ணுர்க ளாசைவலையிற் சுழலுவார், வனிதையர்கள் காமா விகாரமே பகையாகு மற்றுமொரு பகையுமுண்டோ, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனிடு மலைமேவு குமரேசனே. (௭௧)

வேட்டகத்திகழ்ச்சி.

வேட்டகந் தன்னிலே மருகன்வந் திடுமளவின் மென்மேலு முபசரித்து, விருந்துகள் சமைத்து நெய் பாற் றயிர் பதார்த்தவகை வேண்டுவ தெலாமமைப்பார், ஊட்டமிகு வர்க்கவகை செய்திடுவர் தைலமிட் டுறுதியாய் முழுகுவிப்பார், ஓயாது தின்னவே பாக்கிலை கொடுத்திடுவ ருற்றநா ளாகிலோ, நாட்டமொரு படியிறங்குவதுபோன் மரியாதை நாளுக்குநாள் குறைவுறும், நகை செய்வர் மைத்துனர்க ளலுவல்பாற் போவென்று நாணுமன் மாமி சொல்வாள், வாட்டமனை யாளொரு துரும்பாய் மதிப்பளவள் மட்டியிலும் மட்டியன்றோ, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே.

செல்வ நிலையாமை.

ஓடமிடு மிடமது மணற்சுடுஞ் சுடுமிடமு மோடமிகவே நடக்கும், உற்றதோ ராற்றின்மடு மேடாகுமேடெலா முறுபுனல்கொண் மடுவாயிடும், நாடுகா டாகு முயர் காடுநா டாகிவிடு நவில்சகடு மேல்கீழதாய், நடையூறு சந்தைபல கூடுமுடனே கலையு நண்ணிலவு மிருளாய்விடும், நீடுபகல் போயபின் பிரவாகு மிரவுபோய் நிறைபகற் போதாய்விடும், நிதியோர் மிடித்திடுவர் மிடியோர் செழித்திடுவர் நிசமல்ல வாழ்வுகண்டாய், மாடுமனை பாரிசன மக்கணிதி பூஷணமு மருவுகன வாகுமன்றோ மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (எ௬)

பிறந்தாற் பெறும்பேறு.

சடமொன் றெடுத்தாற் புவிக்கு நல்லவனென்று தன்பேர் விளங்கவேண்டும், சதிருடனி தல்லாது மெய்ஞ்ஞானி யென்றவ தரிக்கவே வேண்டுமல்லால், திடமினிய ரணசூர விரனிவ னென்னவே திசைமெச்ச வேண்டு மல்லால், தேகியென வருபவர்க் கில்லையென் னுமலே செய்யவே வேண்டுமல்லால், அடைவுடன் பல

கல்வி யாராய்ந்து வித்துவா னாகவே வேண்டுமல்லால், அறிவான துரைமக்க ளாகவர வேண்டுமிவ ரதிகபூ பாலரையா, வடகுவடு கிடுகிடென வெழுகடலு மலை பெறிய மணியுரகன் முடிகணெரிய, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடுமலைமேவு குமரேசனே. (எச)

வேசை நிந்தை.

தேடித்தம் வீட்டிற் பணக்காரர் வந்திடிற் றேக சிவன் போலவே, சினேகித்த வும்மையொரு பொழுது காணு விடிற் செய்வுறு தன்னமென்றே, கூடிச் சுகிப்ப தொன் றுசையுன் மேலென்று கூசாம லாணையிடுவார், கொங்கையை வெடிக்கப் பிடிக்கக் கொடுத்திதழ் கொடுப்பர்சும் பணமுகப்ப, வேடிக்கை பேசியே கைம்முதல் பறித்தபின் வேறுபட நிந்தைசெய்து, விடவிடப் பேசுவார் தாய்களை மூட்டியே விட்டுத் தூரத்தி விடுவார், வாடிக்கையா யிந்த வண்டப் பரத்தையர் மயக்கத்தை நம்பலாமோ, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (எரு)

இதற்கிது வுறுதியெனல்.

கைக்குறுதி வேல்வின் மனைக்குறுதி மனையாள் கவிக்குறுதி பொருளடக்கம், கன்னியர் தமக்குறுதி கற்புடைமை சொற்குறுதி கண்டிடிற் சத்யவசனம், மெய்க்குறுதி மூன்பின் சபைக்குறுதி விக்வசனம் வேசையர்க் குறுதிதேடல், விரகருக் குறுதிபெண் மூப்பினுக் குறுதியூண் வீரருக் குறுதிதீரம், செய்க்குறுதி நீருரும் பார்க்குறுதி செங்கோல் செழும்படைக் குறுதி வேழம், செல்வந் தனக்குறுதி பிள்ளைக டமக் குறுதி சேர்ந்திடும் சர்ச்சனர்களாம், மைக்குறுதி யாகிய விழிக் குற மடந்தைசுர மங்கைமருவுந் தலைவனே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே.

வறுமையிற் சிறுமை.

வறுமைதான் வந்திடிற் றாய்பழுது சொல்லுவாண் மனையாட்டி சற்றுமெண்ணாள், வாக்கிற் பிறக்கின்ற

சொல்லெல்லாம் பொல்லாத வசனமாய் வந்துவிளையும். சிறுமையொடு தலைபா விசாரமே யல்லாது சிந்தையிற் றெளிவில்லை, செய்யசபை தன்னிலே சென்றுவர வெட்கமாஞ் செல்வரைக் காணினும், உறுதிபெறு வீரமுங் குன்றிடும் விருந்துவரி னுயிருடன் செத்தபிணமாம், உலகம்பழித்திடும் பெருமையோர் முன்பு சென் றொருவரொடு செய்திசொன்னால், மறுவசனமுஞ் சொலார் தம்பினிற் றுன்பமிது வந்தணுகிடா தருளுவாய், மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௭௭)

திச்சார்பா னவையிழப்பு.

ஆனைதண் ணீரினிழல் பார்த்திடத் தவளைசென் றங்கே கலக்கியுலவும், ஆயிரம் பேர்கூடி விடுகட் டிடிலே த மறைகுறளு முடனேவரும், ஏனைநற் பெரியோர்கள் போசனஞ் செயுமளவி லீக்கிடந் திசைகேட்டாம், இன்பமிகு பசுவிலே கன்றுசென் றூட்டுதற் கினியகோ ணதுதடுக்கும், சேனைமன் னவனென்ன கருமஞ்செய மிக்கினுஞ் சிறியோர்களாற் குறைபடும், சிங்கத்தையும் பெரிய ரிஷபத்தையும் பகைமை செய்ததொரு நரியல்லவோ, மானையுந்திகழ்தெய்வ யானையுந் தழுவுமணி மார்பனே யருளாளனே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௭௮)

இடையூறுற்றும் பயன்படுபவை.

ஆறுகண் ணீர்வற்றி விட்டாலு மூற்றுநீ ரமுதபானங்கொடுக்கும், ஆதவனை யொருபாதி கட்செவி மறைந்தாலு மப்போது முதவிசெய்வன், கூறுமதி தேய்பிறைய தாகவே குறையினுங் குவலயத் திருள்சிதைக்கும், கொல்லைதான் சாவிபோய் விட்டாலு மங்குவரு குருவிக்கு மேய்ச்சலுண்டு, வீறுடனு தாரிதான் மிடியான போதினிலு மிகநொடி வருபவர்க்கு, வேறுவகை யில்லையென் னாமையாதியன் றளவியந்துள மகிழ்ந்து தவுவான், மாறுபடு சூரசங் காரகெம்பீரனே வடிவேல ணி

ந்தமுருகா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௪௯)

இன்னவர்க்கிது வில்லையெனல்.

சார்பிலா தவருக்கு நிலையேது முதலிலா தவருக் கிலாபமேது, தயையிலா தவர்தமக் குறவேது பணமிலா தார்க்கேது வேசையுறவு, ஊரிலா தவர்தமக் கரசேது பசிவேளை யுண்டிடாற் குறுதிநிலையே, துண்மையில் லாதவர்க் கறமேது முயலவிலார்க் குறுவதோறு செல்வமேது, சோர்விலா தவருக்கு மற்றுமொரு பயமேது சுகமிலார்க் காசையேது, துர்க்குண மிலாதவர்க் கெதிராளி யேதிடர்செய் துஷ்டர்க் கிரக்கமேது, மார்புருவ வாளிமே லஸ்திரம் விடுத்தநெடு மான்மருக ஞானமுருகா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௫௰)

இதினுமிது நன்றெனல்.

பஞ்சரித் தருமையறியார் பொருளை யெய்தலிற்பலர் மனைப் பிச்சைநன்று, பரிவாக வுபசார மில்லா விருந்திணிற் பட்டினி யிருக்கை நன்று, தஞ்சமொரு முயலைமடு வென்றிசனில்யானையொடு சமர்செய்து தோற்றனன்று, சரசகுண மில்லாத பெண்களைச் சேர்தலிற் சன்னியாசித்தனன்று, அஞ்சலார் தங்களொடு நட்பா யிருப்பதனி லரவினொடு பழகுவது நன், றந்தணர்க் காபத்திலுதவா திருப்பதனி லாருயிர் விடுத்தனன்று, வஞ்சகருடன்கூடி வாழ்தலிற் றனியே வருந்திடுஞ் சிறுமை நன்று, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௫௧)

நிலையாதவை.

கொற்றவர்கள் ராணுவமு மாறுநே ராகிய குளங்களுந் தாசியுறவும், குணமிலார் நேசமும் பாம்பொடு பழக்கமுங் குலவுநீர் விளையாடலும், பற்றலார் தமதிடைவருந்து விசுவாசமும் பழயதாயாதிகிணரும், பரதார

மாதாது போகமும் பெருகிவரு பாங்கான வார்த்தைவர வும், நற்றுமொரு துர்ப்புத்தி கேட்கின்ற பேருாவு நல்லமத யானைநட்பும், நாவினல் லுறவுமொரு நாள்போ லிராதிவைக ணம்பப்படாது கண்டாய், மற்றுமொரு துணையில்லை நீதுணை யெனப்பாவும் வானவர்கள் சிறை மீட்டவா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடுமலை மேவு குமரேசனே. (அ௨)

நற்புலவர் தீப்புலவர் செயல்.

மிக்கான சோலையிற் குயில்சென்று மாங்கனி விருப்பமொடு தேடிநாடும், மிடைகருங் காகங்க ளெக்கனி யிருந்தாலும் வேப்பங் கனிக்கு நாடும், எக்காலும் வரிவண்டு பங்கே ருகத்தினி லிருக்கின்ற தேனைநாடும், எத்தனை சுகந்தவகை யுற்றாலு முருகுவண் டினந்தூர் மலத்தைநாடும், தக்கோர் பொருட்சுவை நயங்க ளெங்கே யென்று தாம்பார்த் துகந்துகொள்வார், தாழ்வான வன்கண்ணர் குற்றமெங்கே யென்று தமிழி லாராய்வர்கண்டாய், மைக்காவி விழிமாது தெய்வானையுங் குறவர் வள்ளியுந் தழுவுகலைவா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (அ௩)

தாழ்தற் பெருமை.

வேங்கைகள் பதுங்குதலு மாமுகி லொதுங்குதலும் விரிசிலை குனிந்திடுதலும், மேடமத கன்றிடலும் யானைக ளொடுங்குதலும வெள்விடைகள் துள்ளிவிழலும், மூங்கில்கள் வணங்குதலு மேலவ ரிணங்குதலு முனிவர்க ணயந்துகொளலும், முதிர்ப்பை யொதுங்குதலும் விளைஞர்க ளடங்குதலு முதலினர் பயந்திடுதலும், ஆங்காவு சாய்குதலு மகிழ்மல ருலர்ந்திடலுமாயர் குழல் சூடுபடலும், அம்புவியி லிவைகாரி யங்களுக் கல்லாம லதனு லிளைப்புவருமோ, மாங்கனிக் காவறனை வலமது புரிந்துவளர் மதகரிக் கிளையமுருகா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே.

தெய்வச்செயல்.

சோடாய் மரத்திற் புறாவொன் றிருந்திடத் துறவு
கண்டே வேடுவன், தோலாம லவையெய்ய வேண்டு
மென் றேநாணை தொடுத்துவில் வாங்கிநிற்க, ஊடாடி
மேலே யெழும்பிடி லடிப்பதற் குல்வுராஜாளி கூட,
உயரப் பறந்துகொண் டேதிரியவப்போ துதைத்தசிலை
வேடனடியில், சேடாக வல்லிவஷந் தீண்டவே யவன்
விழச் சிலையிற் றொடுத்தவாளி, சென்றிராசாளி மெய்த்
தைத்துவிழ வவ்விரு சிறைப்புறா வாழ்ந்தவன்றோ,
வாடாம லிவையெலாஞ் சிவன்செயல்க ளல்லாது
மனச்செயலி னாலும் வருமோ, மயிலேறி விளையாடு குக
னேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (அ௫)

பாடலியல்பு.

எழுத்தசைகள் சீர்தளைக ளடிதொடைகள் சிதையா
திருக்கவே வேண்டுமப்பால், ஈனாம் பொருத்தமொடு
மதுரமாய்ப் பளபளப் பினிபசொற் சுவையவேண்டும்,
அழுத்தமிகு குறளினுங் கொப்பாகவே பொரு ளடக்
கமு மிருக்கவேண்டும், அன்பான பாவின மிசைந்து
வரல்வேண்டுமலங்கார முற்றதாயில், பழுத்தள
முவங்கோசை யுற்றுவரல் வேண்டும் படிக்குமிசைகூட
ல்வேண்டும், பாங்காக வின்னவை பொருந்திடச் சொற்
கவிதை பாடிற் சிறப்பென்பர்காண், மழுத்தினஞ் செ
ங்கைதனில் வைத்தகங் காளனருண் மைந்தனென வந்த
முருகா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலை
மேவு குமரேசனே. (அ௬)

விபூதிதரிக்கு முறைமை.

பத்தியொடு சிவசிவா வென்றுதிரு நீற்றைப் பரி
ந்துகையா லெடுத்துப், பாரினில் விழாதபடி யண்ணாந்து
செவியொடு பருந்தபுய மீதிலொழுக, நித்தமே விரல்
களா னெற்றியி னழுந்தவுற நினைவாய்த்தரிப்பவர்க்கு,
நீடுவினை யணுகாது தேகபரி சுத்தமா நீங்காம னிமல

ணங்கே, சத்தியொடு நித்தம்விளை யாடுவன் முகத்தி
லேதாண்டவஞ் செய்யுந்திரு, சஞ்சலம் வாராதுபர கதி
யுதவு மிவனையே சத்தியுஞ் சிவனென்னலாம், மத்தினி
யமேருவென வைத்தமு தினைக்கடையு மான்மருகனு
ணமுருகா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (௮௭)

விபூதிவாங்குமுறைமை.

பரிதனி லிருந்துமியல் சிவிகையி லிருந்துமுயர் பல
கையி லிருந்துமிகவே, பாங்கான வம்பலந் தனிலேயி
ருந்தும் பருத்த திண்ணையி லிருந்தும், தெரிவொடு
கொடுப்பவர்கள் கீழ்நிற்க மேனின்று திருநீறு வாங்கி
யிடினும், செங்கையொன்றாலும் விரன்மூன்றாலும் வா
ங்கினுந் திகழ்தம்பலத்தி னேடும், அரியதொரு பாதை
யினடக்கின்ற போதினு மசுத்தனில மானவதினும்,
அங்கே தரிக்கினுந் தந்திடற்றள்ளினு மவர்க்குநரகென்
பர்கண்டாய், வரிவிழிமடந்தைகுற வள்ளிநாயகிதனை
மணந்துமகிழ் செகநாதனே, மயிலேறி விளையாடுகுகனே
புல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௮௮)

இவ்வுறுப்பாற் பயனில்லெனல்.

தேவலாயஞ்சுற்றி டாதகா லென்னகால் தெரிசியா
க்கண் ணென்னகண், தினமுமே நின்கமல பாதத்தை
நினையாத சிந்தைதா னென்னசிந்தை, மேவாகமஞ் சிவ
புராணமவை கேளாமல் விட்டசெவி யென்னசெவிகண்,
விமலனை வணங்காத சென்னியென் சென்னிபணி வி
டைசெயாக் கையென்னகை, நாவார நினையேத் திடாத
வா யென்னவாய் நற்றீர்த்த மூழ்காவுடல், நானிலத் தெ
ன்னவுடல் பாவியாகிய சனன மெண்ணினும் பலனேது
காண், மாவாகி வேலைதனில் வருசூரன் மார்புருவ வடி
வேலை விட்டமுருகா, மயிலேறி விளையாடு குகனேபுல்
வயனீடு மலைமேவு குமரேசனே. (௮௯)

நற்பொருளொடு தீப்பொருள் பிறத்தல்.

கோகனக மங்கையுடன் மூத்தவள் பிறந்தென்ன குலவுமாட்டின்கணதர்தான், கூடப் பிறந்தென்ன தண்ணீரி னுடனே கொடும்பாசி யுற்றுமென்ன, மாகருணாம்முதினொடு நஞ்சும் பிறந்தென்ன வல்லிரும்பிற் றுருத்தான், வந்தே பிறந்தென்ன நெடுமரந் தனின்மொக்குள் வளமொடு பிறந்தென்னவும், பாகமிகு சென்னலொடு பதர்தான் பிறந்தென்ன பன்னுமொரு தாய்வயிற்றிற், பண்புறு விவேகியொடு கயவர்கள் பிறந்தென்ன பலனேது மில்லையன்றோ, மாகனக மேருவைச் சிலையென வளைத்தசிவன் மைந்தனென வந்தமுருகா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே.

தன்னினத்தாலழிவு.

குலமான சம்மட்டி குறடு கைக்குதவியாய்க்கூரிரும் புகளை வெல்லும், கோடாலி தன்னுளே மரமதுநுழைந்துதன் கோத்திரமெலா மழிக்கும், நலமான பார்வைசேர் குருவியா னதுவந்து நண்ணுபர வைகளையார்க்கும், நட்புடன் வளர்ந்தகலை மானொன்றுசென்றுதன்ன வில்சாதி தனையிழக்கும், வுலவுநற் குடிதனிற் கோளர்க ளிருந்துகொண் டுற்றாரை யீடழிப்பார், உளவனில்லாமலூ ரழியாதெனச் சொல்லு முலகமொழி நிசமல்லவோ, வலமாக வந்தா னிடத்தினிற் கனிகொண்ட மதயானை தன்சோதரா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (௯௧)

வீணுக்குழைத்தல்.

குயின்முட்டை தனதென்று காக்கையடை காக்குங் குணம்போலு மீக்களெல்லாம், கூடியேதாமுண்ண வேண்டு மென்றேதினங் கூடெய்த்த நறவுபோலும், பயில்சோ ரருக்குப் பிறந்திடத் தாம்பெற்ற பாலனென் றுட்கருதியே, பாராட்டி முத்தமிட் டன்பாய் வளர்ந்தி

டும் பண்பிலாப் புருஷர்போலும், துயிலின்றி நிதிகளைத் தேடியே யொருவர்பாற் றெட்டுத் தெறித்திடாமல், தொகைபண்ணி வைத்திடுவர் கைக்கொண்டு போகவரு சொந்தமானவர் வேறுகாண், வயிரமொடு சூரனைச் சங் காரமே செய்து வானவர்க்குதவுதலவா, மயிலேறி விளை யாடுகுகனேபுல்வயனீடு மலைமேவு குமரேசனே. (௯௨.)

இதுசேரி னிதுபயன்படாதெனல்.

அழலுக் குளேவிட்ட நெய்யும் பெருத்தான வாற் றிற் கரைத்தபுளியும், அரிதான கமரிட் கவிழ்த் திட்ட பாலும் வருமலகைகட் கிடுபூசையும், சுழல்பெருங்காற் றினில் வெடித்தபஞ்சும்மணற்சொரிநறும் பனிநீருநீள், சொல்லரிய காட்டுக் கெறித்த நிலவுங்கடல் சுழிக்குளே விடுகப்பலும், விழலுக் கிறைத்திட்ட தண்ணீரு முக மாய வேசைக்களித்த பொருளும், வீணருக் கேசெய்த நன்றியும் பலனில்லை விருதாவி தென்பர்கண்டாய், மழ லைப் பசுங்கிள்ளை முன்கைமலை மங்கைதரு வண்ணக் குழந்தைமுருகா, மயிலேறி விளையாடு குகனேபுல் வய னீடு மலைமேவு குமரேசனே. (௯௩)

கைவிடத்தகாதவர்.

அன்னை சுற்றங்களையு மற்றைநாண் முதலா வடு த்துவரு பழையோரையும், அடுபகைவரிற்றப்பி வந்த வொரு வேந்தனையு மன்பான பெரியோரையும், தன்னை நம்பினரையு மேழையானவரையுஞ்சார்ந்த மறையோர் தம்மையும், தருணமிதுவென்றுநல் லாபத்துவேளையிற் சரணம்புகுந் தோரையும், நன்னய மதாக முன் னுதவி செய்தோரையு நாளுந்தனக் குறுதியாய், நத்து சேவக னையுங் காப்ப தல்லாதுகை நழுவவிட லாகாதுகாண், மன்னயிலு மினியசெஞ் சேவலுஞ்செங்கைமலர் வைத் தசரவண பூபனே, மயிலேறி விளையாடுகுகனேபுல் வய னீடு மலைமேவு குமரேசனே. (௯௪)

தகாதசெயல்.

அண்டிவரு முற்றூர் பசித்தங் கிருக்கவே யன்னியர்க் குதவுவோரும், ஆசுதப பெரியோர்செய் நேசத்தை விட்டுப்பி னற்பரை யடுத்தபேரும், கொண்ட வொரு மனையா ளிருக்கப் பரத்தையைக் கொண்டாடி மருவுவோரும், கூறுசற் பாத்திர மிருக்க மிகுதானமது குணமிலார்க் கீய்ந்தபேரும், கண்டுவரு புதியோரை நம்பியே பழையரைக் கைவிட்டிருந்த பேரும், கரிவாலை விட்டு நரி வால்பற்றி நதிநீர் கடக்கின்றமரியாதைகாண், வண்டடர் கடப்பமலர் மாலிகா பரணமணி மார்பனே யருளாளனே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (கூ௫)

நல்லோர்முறை.

கூடியே சோதரர்கள் வாழ்தலா லுந்தகு குழந்தை பல பெறுதலாலும், குணமாக வேபிச்சையிட்டுண் கையாலுங் கொடும்பிதிர்க் கிடுதலாலும், தேடியே தெய்வங் களுக் கீதலாலுந் தியாகங் கொடுத்தலாலும், சிறியோர்கள் செய்திடும் பிழையைப் பொருத்துச் சினத்தைத் தவிர்த்தலாலும், நாடியேதாழ்வாய் வணங்கிடுதலாலுமிக நல்வார்த்தை சொல்லலாலும், நன்மையே தருமலாற் றாழ்ச்சிகள்வரா விவை நல்லோர்கள் செயுமுறைமைகாண், வாடிமன நொந்துதமிழ் சொன்னநக்கீரன்முன் வந்துதவி செய்தமுருகா, மயிலேறி விளையாடு குகனே புல் வயனீடு மலைமேவு குமரேசனே. (கூ௬)

அடைக்கலங்காத்தல்.

அஞ்சலென் றுநாயினுட றருமன் சுமந்துமுன் னாற்றைக் கடத்துவித்தான், அடைக்கல மெனுங்கயவுக் காகநெடு மாலுட னருச்சுனன் சமர்புரிந்தான், தஞ்சமென வந்திடு புறவுக்கு முன்சிபி சரீரந்தனைக் கொடுத்தான், வடமலைச் சிறகரிந் தவனை முன்காக்கத் ததிசிமுதுகென்

பளித்தான், இன்சொலுடனேபூத தயவுடைய ராயினே ரெவருக்கு மாபத்திலே, இனிய தஞ்சீவனை விடுத்தாகி லுங்காத் திரங்கிரக்ஷிப்ப ரன்றே, வஞ்சகிரவுஞ்சமொடு தாருகன் சிங்கமுகன் வளர்சூர னுடல்கிண்டவா, மயி லேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (கூஎ)

யோக்கியாயோக்கியம்.

பாலினொடு தேன்வந்து சேரில்ருசி யதிகமாம் பருகிநீர் சேரிலென்னும்; பவளத்தினிடை முத்தை வைத்திடிற் சோபிதம் படிகமணி கோக்கிலென்னும், மேலினிய மன்னர்பால் யானைசேர் வதுகனதை மேஷமது சேரிலென்னும், மிக்கான தங்கத்தி னவமணியு றிற்பெருமை வெண்கல் லழுத்திலென்னும், வாலிப மினார்களுட னிளையோர்கள் சேர்நலம் வளைகிழவர் சேரிலென்னும், மருவு நல்லோரிடம் பெரியோர் வரிற் பிரியம் வருகயவர் சேரிலென்னும், மாலிகை தரித்தமணி மார்பனே தெய்வானை வள்ளிக்கு வாய்த்தகணவா, மயிலேறி விளையாடுகுகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (கூஅ)

பெரியோரியல்பு.

அன்னதா னஞ்செய்தல் பெரியோர்சொல் வழிநிற்ற லாபத்தில் வந்தபேருக், கபயங்கொடுத்திடுத னல்லினஞ் சேர்ந்திடுதலாசிரியன் வழிநின்றவன், சொன்ன மொழி தவறாது செய்திடுதல் தாய்தந்தை துணையடியருச்சனை செயல், சோம்பலில் லாமலுயிர் போகினும் வாய்மை மொழி தொல்புவியி னுட்டியிடுதல், மன்னனைச் சேர்ந்தொழுகல் கற்புடைய மனைவியொடு வைகினுந் தாமரையிலை, மருவுநீ ரெனவுறுத லிவையெலா மேலவர்த மாண்பென் றுரைப்பரன்றே, வண்மையின் மேலுவர்ந் திவ்வுலகை யொருநொடியில் வலமாகவந்த முருகா, மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே. (கூகூ)

நூலின்பயன்.

வன்னமயி லேறிவரு வேலாயுதக் கடவுண் மலைமே லுகந்த முருகன், வள்ளிக் கொடிக்கினிய வேங்கைமர மாகிநின்றோன் வானவர்கள் சேனாபதி, கன்னன்மொழி யுமையா டிருப்புதல்வ னரன்மகன் கங்கைபெற் றருள் புத்திரன், கணபதிக் கிளையவொரு மெய்ஞ்ஞான தேசிகக் கடவுளாவினன் குடியினான், பன்னரிய புல்வயலில் வாலகுமரேசர்மேற் பரிந்துகுருபாததாசன், பாங்கான தமிழாசிரியவிருத் தத்தினை பாடலொரு நூறுநாடி, நன்னய மதாகப் படித்தபேர் கேட்டபேர் நாடோறுங் கற்றபேர்கள், ஞானயோகம் பெறுவர் பதவியாவும் பெறுவர் நன்முத்தியும் பெறுவரே. (ள)

குமரேசசதகம்.

முற்றிற்று.

மெய்கண்டதேசிகன் மென்கழல்வாழ்க.